திரு. அ. பிரணவநாதன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது அரசு நிதி மூலமாக அல்லது கடனாகவாவது வழங்கி அந்தப் பேருந்து நிலையத்தைக் கட்ட வேலை தொடங்க வேண்டுமென்று நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதாவது சாத்தியக் கூறு இருக்கிறதா என்று அரசு ஆராயும்.

தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சி இடத்தில் ஆக்கிரமிப்பு.

28—(* வினா எண் 5548) திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு உள்ளாட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம் பென்னாகரம் பேரூராட்சிக்குச் சொந்தமான இடங்களை சிலர் ஆக்கிரமிப்பு செய்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், ஆக்கிரமிப்பாளர்களை அப்புறப்படுத்த அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பென்னாகரம் பேரூராட்சிக்குச் சொந்தமான பேருந்து நிலையத்தைச் சுற்றியுள்ள ஆக்கிரமிப்புகளை கண்டறிய சர்வே செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆக்கிரமிப்புகள் கண்டறியப்பட்டவுடன் அவற்றை அகற்ற மேல் நடவடிக்கை துரிதமாக எடுக்கப்படுகிறது.

திரு. எச். ஜி. ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் துரிதமாக நடவடிக்கை எடுப்பதாகக் கூறியதற்காக பென்னாகரம் தொகுதிவாழ் மக்களின் சார்பாக நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். 5, 6, ஆண்டுக்காலமகவே நடவடிக்கை எடுக்கப் படுவதாகச்சொல்லியும் அந்த ஆக்கிரமிப்புகள் அகற்றப்படவில்லை. கடந்த 4, 5 மாதங்களுக்கு முன்னதாகவே அங்கே வேலை செய்வ தற்காக ஐ.யு.டி. பேங்க் மூலமாக 25 லட்ச ரூபாய் சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் வேலை தொடங்கப்படாமல் இருக்கிறது. வசதி படைத்தவர்கள்தான் அந்த இடத்திலே ஆக்கிர மிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அந்தப் பேரூராட்சிக்கு வேறு எந்தவித வருமானமும் இல்லாமல் இருக்கிறது. போதிய வருமானத்தை ஈட்டித்தர அரசு முன்வருமா ?

*1986 நவம்பர் 17]*

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர் அவர்கள் தெரிவித்ததைப் போல் நடவடிக்கை துரிதப் படுத்தப்படும்.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியதற்காக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நான் மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலேயும் நேரிலே எடுத்துக் கூறியிருக்கிறேன். நெடுஞ் சாலைத் துறை அதிகாரிகளிடத்திலும் எடுத்துக் கூறியிருக்கிறேன். வலது கம்யூனிஸ்ட் கட்சி ஆபீஸ் அங்கே வைத்துக் கொண்டிருக் கிறார்கள். அதனால்தான் தடைபட்டிருக்கிறது. அதை அகற்றி னாலே மீதியுள்ளவர்களும் அகற்றுவதற்குத்தயாராக இருப்பார்கள் எனவே அதை அகற்றுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா ஆக்கிரமிப்புகளும் அகற்றப்படும்.

**திரு. கு. சுப்பராயன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பென்னாகரத்தில் மட்டுமல்ல தமிழ்நாட்டின் பல்வேறு நகரங்களிலும் பேரூராட்சிகளிலும் அரசுக்குச் சொந்தமான இடங் களில் உள்ள ஆக்கிரமிப்புக்களை அப்புறப்படுத்துவதிலே இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி மகிழ்ச்சி கொள்கிறது. ஆகவே துரிதமாக ஆக்கிரமிப்புக்களை அகற்றுவதற்கு மாநில அரசு நடவடிக்கை எடுக்க முன்வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கொள்ளும்.

**திரு. வே. இரா. ஜெயராமன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரூராட்சிகளிலே, நகராட்சிகளிலே உள்ள ஆக்கிர மிப்புகளை குறிப்பாக குடிசைகளை காலிசெய்யக்கூடாது என்று உச்சநீதிமன்றம் பொது தடை விதித்திருக்கிறதே, அந்தத் தடையை மாற்றுவதற்கு அரசு முன் வருமா ?

**மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்துத் தனிக் கேள்வி போடுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

**திரு. மா. மணிமாறன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆக்கிரமிப்பு என்பது குடியிருப்பு மனைகளைவிட கிராமபுறங்களிலே ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்கள் ஆகிய வற்றிற்குச் சொந்தமான சாலைகளை அதிகமாக ஆக்கிரமித்து வயல்களாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே அமைச்சர் அவர்கள் பொது உத்திரவொன்று போட்டு அந்தச் சாலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுப் பார்களா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது குறித்து அரசு பரிசீலனை செய்யும்.

### இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்படும் குடும்ப நல நிலையம்.

29—(* வினா எண் 4847) திரு. கு. ரமணி : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னையில் இந்திய மருத்துவக் கழகம் நடத்தி வந்த குடும்பநல நிலையம் 1-4-85 முதல் மூடப்பட்டுவிட்டது அரசுக்குத் தெரியுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் காரணமென்ன ?

(இ) அதன்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இந்திய மருத்துவக் கழகத்தின் நிதிப் பற்றாக்குறையினால் மூடப்பட்டதாகத் தெரிகிறது.

(இ) சென்னையில் குடும்பநலப் பிரிவுகள் மாநகராட்சியால் நடத்தப்படுவதால் இந்திய மருத்துவக் கழகத்தால் நடத்தப்பட்ட குடும்பநல நிலையத்தையும் சென்னை மாநகராட்சியே எடுத்து நடத்த இயலுமா என்பது குறித்து, அரசு ஆராய்ந்து வருகிறது.

திரு. கு. ரமணி : தலைவர் அவர்களே, முதலிலே தங்களுக்கு வணக்கமான ஒரு சப்மிஷன். 1-4-85 லே கொடுத்த கேள்வி இது. $1\frac{1}{2}$ வருஷத்திற்குப் பிறகு வந்திருக்கிறது. இப்படி பல கேள்விகள் வருடக்கணக்காகித்தான் வந்து கொண்டு இருக்கின்றன என்பதைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன்.

நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லும்போது, நிதி நெருக்கடியினால் இந்திய மருத்துவக் கழகம் அதை மூடிவிட்டது, ஆனால் மாநகராட்சி அதை எடுத்துக் கொண்டுள்ளது என்று கூறுகிறார்கள். இப்போது அந்த குடும்பநல நிலையத்திற்குள் இருக்கும் படியான வசதிகள் என்ன ? எவ்வளவு பேர்களை அங்கே அட்மிட் பண்ணி, அவர்களுக்கு சிகிச்சை அளிக்க முடியும், மற்ற உதவிகள் செய்ய முடியும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : பேரவைத் தலைவர் அவர்களே, மாநகராட்சி எடுத்துக் கொண்டுவிட்டதாக நான் சொல்லவில்லை. மாநகராட்சி எடுத்து நடத்த இயலுமா என்று அரசு கேட்டிருக்கிறது என்றுதான் நான் சொன்னேன். மற்ற விவரங்கள் என்னிடத்திலே இல்லை.